# RECORD OF DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF DISTRICT MUNSIF UTHANGARAI
## KRISHNAGIRI DISTRICT

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Case No.** | **:** | O.S.No. 68 of 2016 | **CNR No.** | **:** | TNKI13-000713-2016 |
| **Name** | **:** | மாது | **Father's Name** | **:** | கொளந்தை |
| **Witness for** | **:** | Defendant | **Calling** | **:** | DW1 |
| **Age** | **:** | 49 | **Village** | **:** | ஒட்டப்பட்டி |
| **Taluk** | **:** | ஊத்தங்கரை | **District** | **:** | கிருஷ்ணகிரி |
| **Start Time** | **:** | 04.00 PM | **End Time** | **:** | 05.10 PM |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 15.04.2025 administered by Thiru. G. Amar Anand, B.A.LL.B (Hons), LL.M, District Munsif, Uthangarai.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை:**

(1) 63 வருடங்களுக்கு முன்பு பாகப்பிரிவினை ஆனதாக சொல்லும் நிலையில் அதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். வாதிகள் எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் அவர்கள் அண்ணனிடமிருந்து வாங்கிய நிலத்தில் அளவு குறைவாக உள்ளதாக வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். எனது தந்தை கொளந்தைக்கும், சின்னதம்பிக்கும் பாகம் ஆகி 63 வருடங்கள் ஆகிவிட்டது என்றால் சரிதான். வழக்கு சர்வே எண்ணில் வாதியின் சகோதரரான கோவிந்தசாமியிடமிருந்து வாதிகள் ஏதாவது நிலம் வாங்கியுள்ளேனா என்றால் இல்லை. எந்த சர்வே எண்ணில் நான் வாங்கியுள்ளேன் என்றால் பட்டா எண் 75 ஆகும், 50 செண்ட் வாங்கியுள்ளேன், சர்வே எண் தெரியாது. வழக்கு சொத்து குறித்த யூடிஆர் பட்டாவை தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். யூடிஆர்

பட்டாவானது 1986-ல் வழங்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. **வா.சா.ஆ.1** காண்பிக்கப்பட்டு **ஒட்டம்பட்டி கிராம சர்வே எண் 75/3 பி-ல் 0.35.5 ஹெக்டேர்** சின்னத்தம்பி பெயரில் வழங்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. 02.05.1995 தேதியில் மேற்சொன்னவாறு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு பட்டா பற்றி தெரியாது. **வா.சா.ஆ.1-**ல் மேற்சொன்னவாறு விவரங்கள் உள்ளன என்றால் சரிதான். வாதி தனபதிக்கும் கோவிந்தசாமிக்கும் இடையே பாகப்பிரிவினை ஆகிவிட்டது என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. கோவிந்தசாமியிடமிருந்து 13.05.1998 தேதியில் 2-ம் வாதி புஷ்பா பெயரில் சர்வே எண் 63/3-ல் 52, 6 செண்ட் என இரண்ட தாக்குகளாக விற்பனை செய்துள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது. அவர்கள் குடும்பத்தில் பாகம் ஏற்பட்டு அதனை அனுசரித்து கிரைய பத்திரம் ஏற்படுத்தப்பட்டுள்ள விவரம் எனக்கு தெரியும் என்றும் வழக்கிற்காக தெரியாது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. **வா.சா.ஆ.3** காண்பிக்கப்பட்டு, அதேபோல் 02.09.2002 தேதியில் 2-ம் வாதிக்கு கோவிந்தசாமி, கோவிந்தி, தமிழரசி ஆகியோர்கள் சேர்ந்து சர்வே எண் 63/3-ல் 90 செண்ட் கிரையம் கொடுத்துள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியும் ஆனால் அதே நேரத்தில் தான் வேறு சர்வே எண்ணில் எங்களுக்கு விற்பனை செய்தார்கள். 02.09.2002 தேதியில் எனது அம்மா சம்பூரணம் என்பவருக்கு கோவிந்தசாமி சர்வே எண். 75/3 பி-ல் 53 செண்ட் நிலம் கிரையம் செய்துள்ளார்கள் என்றால் 53 செண்ட் நிலமும் அதில் உள்ள கிணறும் மற்றும் மின் இணைப்பும் கிரையம் கொடுத்தார்கள் ஆனால் மின்இணைப்பு தராமல் ஏமாற்றிவிட்டார்கள். **வா.சா.ஆ.4** கிரைய பத்திரத்தில் மின்

இணைப்பு எழுதப்படவில்லை என்றால் சரிதான், ஏமாற்றிவிட்டார்கள். கோவிந்தசாமி எனது சகோதரர் என்றால் சரிதான். கோவிந்தசாமி, கோவிந்தி, தமிழரசி ஆகியோர்கள் தான் **வா.சா.ஆ.4** மூலம் எனது அம்மாவிற்கு கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். வழக்கு சொத்தில் 24 செண்ட் விடுபட்டுள்ளது என்றும் பட்டா வழங்கப்படவில்லை என்று 22.07.2015 தேதியில் 2–ம் வாதி மனு செய்த விவரம் தெரியுமா என்றால் தெரியும் விசாரணைக்கு ஆஜராகியிருந்தேன், வருவாய் துறையினர் அளந்து காட்டினார்கள். 17.06.2016–ம் தேதியில் ஆஜராக அழைப்பாணை வந்தது என்றும் நாங்கள் ஆஜராகவில்லை என்றால் சரியல்ல, நான் ஆஜராகியிருந்தேன். மேற்சொன்ன விசாரணைக்கு நான் வரவில்லை என்றும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல, ஆஜராகியிருந்தேன். 19.01.2016 தேதியிட்ட அழைப்பாணையின் பேரில் வாதிகள் ஆஜராகி வாக்குமூலம் அளித்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. மேற்படி அழைப்பாணையானது கொளந்தை, கிராம நிர்வாக அலுவலர், வட்டாட்சியர், ஊத்தங்கரை ஆகியோர்களுக்கு சார்வாகியுள்ளது என்றால் எனக்கு தெரியாது. வழக்கு சொத்திற்கு வாதிகள்தான் கந்தாயம் கட்டி வருகிறார்கள் என்றால் எனக்குத் தெரியாது. 10.06.1987 முதல் 08.06.2000 வரை சர்வே எண். 63/3 உட்பிரிவு ஆகவில்லை என்றால் சரியல்ல, கிரையம் வாங்கிய போது உட்பிரிவாகி இருந்தது. 1409 பசலி ஆண்டிற்கான அடங்கல் 1–ம் வாதி பெயரில் இருந்து வருகிறது என்றால் தெரியாது. **வா.சா.ஆ.15** காண்பிக்கப்பட்டு சிட்டாவானது சர்வே எண். 63/3 கோவிந்தசாமி மற்றும் தனபதி பெயர்களில் உள்ளது என்றால் சரிதான், **வா.சா.ஆ.15**–ல் அவ்வாறுதான் உள்ளது.

(2) வட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற விசாரணையின் உத்தரவு நகல் எனக்கு சார்வு ஆனதா என்றால் இல்லை. வழக்கு சொத்தை பொறுத்து எந்த தேதியில் உட்பிரிவு ஆனது என்றால் எனக்குத் தெரியாது, எந்த வருடம், எந்த மாதம் என்று தெரியுமா என்றால் எனக்குத் தெரியாது. அசல் யூடிஆர் பட்டா யாரிடம் உள்ளது என்றால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். யார் பெயரில் யூடிஆர் பட்டா இருந்தது என்றால் எனது அப்பா கொளந்தை பெயரில் இருந்தது. அசல் யூடிஆர் பட்டா தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. **பி.வா.சா.ஆ.2** ஆவணத்தில் வட்டாட்சியர் கையொப்பம் எந்த தேதி என்று இல்லை என்றும் கிராம நிர்வாக அலுவலர் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். **பி.வா.சா.ஆ.2** ஆவணம் வழக்கிற்காக தயரிக்கப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல, விசாரணையின் பேரில்தான் வழங்கப்பட்டது. **பி.வா.சா.ஆ.2** ஆவணம் வழக்கிற்காக மோசடியாக தயாரிக்கப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. **பி.வா.சா.ஆ.3** ஆவணம் வருவாய்துறையினரால் மோசடியாக தயாரிக்கப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. **பி.வா.சா.ஆ.4** ஆவணம் மோசடியாக தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. **பி.வா.சா.ஆ.5** ஆவணம் வாதிகள் பெயரில் வழங்கப்பட்ட சிட்டா என்றால் சரிதான். **பி.வா.சா.ஆ.6** ஆவணத்தில் கண்டுள்ள சர்வே எண். 63/3—ன் உட்பிரிவுகளின் உட்பிரிவு செய்யப்பட்ட உத்தரவு நகல் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தெரியாது. **பி.வா.சா.ஆ.7** ஆவணம் சர்வே எண். 63/3—க்கு உட்பட்டது அல்ல என்றால் சரிதான்.

(3) வழக்கு சொத்து சர்வே எண். 63/3 முதலில் 3 ஏக்கர் 13 செண்ட் இருந்தது என்றும், 1—ம் வாதியின் அப்பாவிற்கு வாய்மொழி பாகத்தில்

கொடுக்கப்பட்டு அவர் அனுபவித்து வந்து அதன் அடிப்படையில் வா.சா.ஆ.1 வழங்கப்பட்டது என்றால் எனக்குத் தெரியாது. அதற்கு பிறகு 1–ம் வாதியின் சகோதரருக்கு வாய்மொழி பாகமாக கொடுக்கப்பட்டு 2 கிரைய பத்திரங்கள் மூலம் 1 ஏக்கர் 43 செண்ட் 2–ம் வாதி அடைந்து அனுபவித்து வருகிறார் என்றால் எனக்குத் தெரியாது. மீதமுள்ள 1 ஏக்கர் 65 செண்ட் நிலம் 1–ம் வாதிக்கு வாய்மொழி பாகம் மூலம் கொடுக்கப்பட்டு அனுபவித்து வரும் சொத்து என்றால் எனக்கு தெரியாது. சர்வே எண். 63/3–ல் 3 ஏக்கர் 13 செண்ட் நிலம் முழுவதும் வாதிகள் மட்டுமே உரிமையாளர்கள் என்றும் அவர்கள் தான் அனுபவித்து வருகிறார்கள் என்றும் தவறான பட்டாவை பெற்றுதான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. கூடுதலாக பட்டா வாங்கிய விவரம் வாதிகளுக்கு 2015–ம் ஆண்டு தான் தெரியும் என்றால் சரியல்ல. தெரிந்த உடன் வருவாய் துறையில் மனு செய்தார்கள் என்றும் அவர்களது அனுபவத்தில் நாங்கள் இடையூறு செய்ததால் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. வழக்கு நிலுவையில் இருக்கும் போது வாதிகள் மீது பொய்யாக புகார் கொடுத்து வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல, உண்மையான புகார்தான் கொடுத்துள்ளேன். வாதிகளுடைய தென்னஞ்செடியை நான் பிடுங்கிவிட்டு வாதிகள் மீது பொய்யான புகார் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கில் பொய்யான ஆவணங்கள் தயாரித்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்து வாதிகளின் அனுபவதில் தான் உள்ளது என்றும் எந்த காலத்திலும் பிரதிவாதிகள் அனுபவத்தில் இல்லை என்றால் சரியல்ல. நான் அரசு அலுவலர் என்பதால் வாதிகளுக்கு துணை இல்லாததாலும் எனக்கு எதிராக இந்நீதிமன்றத்தை

நாடியுள்ளார்கள் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் எனது அப்பா பெயரில் உள்ள சொத்திற்கு முழு உரிமை உண்டு. எனது தந்தைக்கு வழக்கு சொத்து வாய்மொழி பாகம் மூலமாகவோ ஆவணம் மூலமாகவோ எந்த உரிமையும் இல்லை என்றும், நான் வழக்கிற்காக பொய் பாத்தியம் கொண்டாடி வருகிறேன் என்றார் சரியல்ல. எனது அப்பாவிற்கும் 1–ம் வாதியின் தந்தை சின்னதம்பிக்கும் வாய்மொழியாக பாகம் பிரித்துக் கொடுத்தது யார் என்றால் எனது தாத்தா ஜல்ல கவுண்டர் ஆகும். எப்போது பிரித்தார்கள் என்றால் சுமார் 63 வருடங்கள் இருக்கும். பாகம் பிரிக்கும்பொழுது யார் யார் உடன் இருந்தார்கள் என்றால் எனக்குத் தெரியாது. அசல் யூடிஆர் பட்டா யாரிடம் உள்ளது என்றால் **பி.வா.சா.ஆ.2** மட்டும் தான் உள்ளது, அவ்வாறு வரைபடம் உள்ள பட்டா பார்க்கவில்லை. பிரதிவாதி தரப்பு அசல் ஆவணங்கள் இல்லை என்றால் அவை அதிகாரிகள் வழங்கிய உண்மை நகல்கள் ஆகும். அவை அதிகாரிகளை வசப்படுத்தி வாங்கிய ஆவணங்கள் என்பதால் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எதிர் வழக்குரை சங்கதிகள் ஏற்கக்கூடியவை அல்ல என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்களில் எந்த உரிமையும் இல்லை என்றும் வாதிகள் கோரியுள்ளவாறு தீர்வாக வேண்டும் என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் வாதிகள் கோரியவாறு செலவுத்தொகையுடன் தீர்வாக வேண்டும் என்றால் சரியல்ல.

(4) **குறுக்கு விசாரணை முடிவுற்றது.**

Taken down by me in open Court, read over to the witness and acknowledged by him / her to be correct.

AMAR ANAND

District Munsif
Digitally signed by AMAR ANAND
Location: Uthangarai

District Munsif
Uthangarai